# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 108 | வியாழக்கிழமை Thursday | 16.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தீவிரமாகிறது போதைப்பொருள் ஒழிப்பு வேட்டை

## முதலமைச்சர் விஜய்யுடன் கேரள அமைச்சர் சென்னிதாலா சந்திப்பு



சென்னை: போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை தொடர்பாக தமிழக முதலமைச்சர் விஜய்யை, கேரள அமைச்சர்ரமேஷ்சென்னிதாலா இன்று சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். கேரளாவில் போதைப்பொருட்களின் புழக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளது. போலீசார்பல்வேறுகட்ட நடவடிக்கைகளை எடுத்தபோதிலும்,அங்கு போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதையடுத்து, ஆபரேஷன் Toofan என்ற பெயரில் போதைப்பொருள் ஒழிப்பு வேட்டையில் கேரள அரசு இறங்கியுள்ளது.

இந்நிலையில், தமிழகம் வந்த கேரள உள்துறை அமைச்சர் ரமேஷ் சென்னிதாலா, முதலமைச்சர் விஜய்யை தலைமைச் செயலகத்தில் சந்தித்து பேசினார்.

அப்போது,கேரளாவில் போதைப்பொருட்களுக்கு எதிரான ஆபரேஷன் Toofan நடவடிக்கைக்கு தமிழக அரசின் ஒத்துழைப்பு தேவை என முதலமைச்சர் விஜய்யிடம் ரமேஷ் சென்னிதாலா கேட்டுக்கொண்டார். சுமார் அரைமணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்புக்கு பிறகு வெளியே வந்த கேரள அமைச்சர்ரமேஷ்சென்னிதாலா, அங்கிருந்த செய்தியாளர்களை சந்தித்தார்.

அவர் கூறுகையில், "கேரளாவில் போதைப்பொருளுக்கு எதிராக ஆபரேஷ் Toofan என்ற திட்டத்தை தொடங்கியுள்ளோம். இதனை கடந்த 43 நாட்களாக வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம்.

இந்த நடவடிக்கையின் கீழ் இதுவரை 6,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 5,500 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களின் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருட்கள் என்பது ஒரு மாநிலத்திற்கு மட்டும் அச்சுறுத்தல் அல்ல. ஒரு நாட்டிற்கே அது அச்சுறுத்தல் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்நாடு, கேரளாவை ஒட்டியுள்ள மாநிலம்என்பதால்இந்த நடவடிக்கையில் தமிழக அரசின் ஒத்துழைப்பும் தேவை. இதனை முதலமைச்சர் விஜய்யிடம் தெரிவித்தோம். அதற்கு அவர், தமிழக அரசின் முழு ஒத்துழைப்பையும் தருவதாக உறுதியளித்தார்.இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக - கேரள எல்லைப்பகுதிகள் அனைத்தும் முழுமையாக கண்காணிக்கப்பட்டு, சீல் வைக்கப்படும் என்றும், போதைப்பொருள் கடத்தல்காரர்களை பிடிக்க இரு மாநில போலீஸ் படைகளும் கைகோர்த்துச் செயல்படும் எனவும் முதலமைச்சர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலும் போதைப்பொருட்களுக்குஎதிராகவலுவான நடவடிக்கையை முதலமைச்சர் விஜய் எடுத்து வருகிறார். போதைப்பொருட்களுக்குஎதிரான பிரச்சாரத்தில் பங்கேற்குமாறு முதலமைச்சர் விஜய்யை கேரளாவிற்கு அழைத்துள்ளோம்.

கேரள மாநில போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு தூதராகஉள்ளமோகன்லாலும், தமிழக முதலமைச்சர் விஜய்யும் இணைந்து கேரளாவில் ஒரு பெரிய விழாவில் பங்கேற்பார்கள். அதற்கு முதலமைச்சரும் சம்மதம் தெரிவித்துள்ளார்" என ரமேஷ் சென்னிதாலா கூறினார்.

# லஞ்சம் கேட்டால் வாட்ஸ்ஆப்பில் புகார் தெரிவிக்கலாம்

## புதிய வசதியை அறிமுகம் செய்த தவெக அரசு



சென்னை:

அரசு அலுவலர்கள் யாரேனும்லஞ்சம்கேட்டால் பொதுமக்கள் உடனடியாக புகார் அளிக்கும் வகையில், புதிய வாட்ஸ்ஆப் எண்ணை தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் த.வெ.க அரசு பொறுப்பேற்றதிலிருந்து லஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்க பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு அலுவலர்கள் யாரேனும் லஞ்சம்கேட்டால்உடனடியாக அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் விஜய்தெரிவித்துள்ளார்.

மேலும், யாரேனும் லஞ்சம் கேட்டால் கொடுக்க முடியாது என்று நேரடியாக கூறும்படியும், உடனடியாக அதுகுறித்து அரசுக்கு தெரிவிக்கும்படியும் கூறியுள்ளார்.

இந்நிலையில் அரசு அலுவலர்கள் யாரேனும் லஞ்சம் கேட்டால், பொதுமக்கள் உடனடியாக 94981 80936 என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் தகவல் அனுப்பி புகார் அளிக்கலாம் எனதமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.ஊழலைத்தடுக்கும் நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த புதிய புகார் அளிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகதலைமைச் செயலாளர் எம். சாய் குமார் அனைத்து துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.அதில், "மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் வருகை தரும் இடங்களில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு அறிவிப்பு பலகைகளை முக்கிய இடங்களில் கட்டாயம் காட்சிப்படுத்த வேண்டும்.

மேலும், அனைத்து அரசு துறைகளின் அதிகாரப்பூர்வ இணையதளங்களிலும் வாட்ஸ்ஆப் புகார் எண் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை (DVAC) இணையதள இணைப்பை வெளியிட வேண்டும்.இதற்குமுன்பும் இதுபோன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்ப ட்டிருந்தாலும், பல அரசு அலுவலகங்களில் அறிவிப்பு பலகைகள் முறையாக வைக்கப்படவில்லை என்பது அரசின் கவனத்துக்கு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, "லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் குற்றம்" என்ற வாசகம் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தெளிவாகவும், பொதுமக்கள் எளிதில் பார்க்கும் வகையிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.மேலும்,தமிழிலும் ஆங்கிலத்திலும் புகார் அளிக்கும் நடைமுறைகள் இடம்பெற்ற மாதிரி அறிவிப்பு பலகையையும் அலுவலகங்களில் வைக்க வேண்டும்" என்று அறிவுறு த்தப்பட்டுள்ளது.

அந்த சுற்றறிக்கையில், வாட்ஸ்ஆப் தவிர, dvac@nic.in என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவும், 044-22321090, 22321085, 22310989,22342142 ஆகிய தொலைபேசி எண்கள் மூலமாகவும் பொதுமக்கள் லஞ்சம் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், எழுத்துப்பூர்வமான புகார்களை இயக்குநர், லஞ்ச ஒழிப்புத் துறை (DVAC), எண் 293, எம்.கே.என். சாலை, ஆலந்தூர், சென்னை - 600016 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# நீதிமன்றக் காவலில் இருந்த கைதி உயிரிழப்பு; சம்பந்தப்பட்ட 3 சிறைத்துறை பணியாளர்கள் கைது

கன்னியாகுமரி மாவட்டம், ஈத்தங்காடு கிராமத்தைச் சேர்ந்த சசிதரன் மகன் சபரி வர்மன் (35) என்பவர், தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை வைத்திருந்தது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக, சுசீந்திரம் தாழக்குடி (S.T. Kulam) காவல் நிலைய குற்ற எண் 147/2026-ல், COTPA Act பிரிவு 6(a) r/w 24(1) மற்றும் பாரதிய நியாய சன்ஹிதா (BNS) பிரிவு 123-ன் கீழ் 09.07.2026 அன்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் காவல் நிலையத்தில் இருந்த முழு நேரமும் பதிவான கண்காணிப்பு கேமரா (CCTV) காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டதில், அவரிடம் காவல்துறையினர் முறையான விதத்தில் நடந்துகொண்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதற்கு முன்பாக, நடைமுறையின்படி அவருக்கு விரிவான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவ அதிகாரி, அவரது உடலில் எந்தவித காயமும் இல்லை என்றும், நீதிமன்றக் காவலுக்குஅனுப்பத்தகுதியானவர் என்றும் சான்றளித்தார் காவல்துறையினரால் துன்புறுத்தப்பட்டதாக அவர் எந்தவித புகாரும் தெரிவிக்கவில்லை. அப்போது அவரது உடலில்எந்தகாயமும் பதிவாகவில்லை. அதன் பின்னர் அவர் நாகர்கோவில் மாவட்ட சிறையில் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார்.



13.07.2026 அன்று, நாகர்கோவில் மாவட்ட சிறையில் நீதிமன்றக் காவலில் இருந்த சபரி வர்மன் உயிரிழந்ததாக தகவல் பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நடைமுறையின்படி நீதித்துறைநடுவர் விசாரணை (Inquest) மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவர்கள் குழுவினரால், முழுமையான காணொளிப் பதிவுடன் (Videography) உடற்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையால் சிறப்பு புலனாய்வுக்குழுஅமைக்கப்பட்டு, முழுமையான மற்றும் பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின் ஒரு பகுதியாக,சிறையில்பதிவான CCTV காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. கைதிகள் மற்றும் சிறைத்துறை பணியாளர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. மேலும், அறிவியல் மற்றும் ஆவண ஆதாரங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. விசாரணையின் போது கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில், 12.07.2026 இரவு சிறைக்குள் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து, உயிரிழந்த சபரி வர்மன் சிறைத்துறை பணியாளர்களால் தாக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. கீழ்க்கண்ட சிறைத்துறை பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்:

- N. ஜெஹான் - தரம்-I சிறைக் காவலர் (Grade-I Warder) - N. சுரேஷ் - தலைமை தலைமைக் காவலர் (Chief Head Warder)
- J.சிவக்குமார் -தரம்-II சிறைக் காவலர் (Grade-II Warder) தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில்உலகநுகர்வோர்உரிமைகள்தினம்2026ஐமுன்னிட்டுபல்வேறுபோட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ,மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (14.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆர்.மகேஸ்வரி உட்பட பலர் உள்ளனர்.

## காமராஜர் கல்வி வளர்ச்சி நாள் விழா:

# தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிய கனரா வங்கி முதன்மை மேலாளர்

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் காமராசரின் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.



விழாவிற்கு பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை வகித்தார். மாணவி ரித்திகா வரவேற்புரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேவகோட்டை கனரா வங்கி முதன்மை மேலாளர் சுகன்யா பேசுகையில், "காமராசர் எத்தனை தலைமுறைகள் கடந்தாலும் மக்களின் மனதில் நிலைத்து நிற்கும் தலைவர். மதிய உணவுத் திட்டத்தின் மூலம் ஏழை மாணவர்களும் பள்ளிக்கு வருவதற்கான வாய்ப்பை உருவாக்கியவர் காமராசர்." என்றார்.

மேலும், காமராசர் எந்த ஊருக்குச் சென்றாலும் முதலில் அங்குள்ள பள்ளிகளைப் பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும், அரசு அதிகாரிகள் சுயநலமின்றி பொதுநலனுக்காகச் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தியவர் என்றும் குறிப்பிட்டார்.

மாணவர்கள் சிறுவயதிலிருந்தே சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும்,தங்களின் சந்தேகங்கள், பிரச்சினைகள் மற்றும் உணர்வுகளை பெற்றோர், ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்என்றும்அறிவுறுத்தினார்.

தனது தந்தை உடல் மாற்றுத்திறனுடன் இருந்தபோதிலும் கல்வியின் மூலம் முன்னேறி மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றதை எடுத்துக்காட்டாகக் கூறி, கல்வியே வாழ்க்கையை உயர்த்தும் சக்தி என்பதை மாணவர்களுக்கு விளக்கினார்.

மேலும், மொபைல் போன்களின் தேவையற்ற பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்றும், பிறருடன் தங்களை ஒப்பிடாமல்,தங்களது திறமையில் நம்பிக்கை வைத்து முன்னேற வேண்டும் என்றும் மாணவர்களுக்கு ஊக்கமளித்தார்.

விழாவையொட்டி காமராசரின் வாழ்க்கை மற்றும் சாதனைகளை மையமாகக் கொண்டு கவிதை, பேச்சு, ஓவியம் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கனரா வங்கி முதன்மை மேலாளர் சுகன்யா பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

காமராசர் கல்வி வளர்ச்சி நாளை முன்னிட்டு அனைத்து மாணவர்களுக்கும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி நிறைவில் ஆசிரியர் ஸ்ரீதர் நன்றியுரை வழங்கினார்.



தூத்துக்குடி ம.தி.மு.க. சார்பில் கர்மவீரர் முன்னாள் முதல்வர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி வ.உ.சி மார்க்கெட் பகுதி அருகே அமைந்துள்ள காமராஜர் திருவுருவ சிலைக்கு மாநகரச் செயலாளர் முருகப் பூபதி தலைமையில் வெளியிட்டு அணி செயலாளர் நக்கீரன், மாவட்ட பிரதிநிதி பொன்ராஜ், இளைஞர் அணிச் செயலாளர் சரவண பெருமாள், மாணவரணி செயலாளர் பொம்முதுரை பொய்யாழி மகாராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.இ.ஷஹ்னாஸ், மாவட்டத்தில் குற்ற வழக்குகள் மற்றும் நீதிமன்ற பணிகளில் திறம்பட செயல்பட்ட காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களின் பணியினை பாராட்டி பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

# தேனியில் கல்வி தந்தை காமராஜரின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம் நடைபெற்றது



தேனியில்கல்விதந்தை காமராஜரின் 124 வது பிறந்தநாளைமுன்னிட்டு பல்வேறு இடங்களில் இரத்ததான முகாம் நலத்திட்ட உதவி வழங்கும் முகாம் நடைபெற்றது

மேலும் தேனியில் உள்ள நாடார் சரஸ்வதி பள்ளியில் காமராஜரின் பிறந்தநாளைமுன்னிட்டு அவருடைய திருவருவ சிலைக்கு பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது இதேபோல் தேனி சமதர்மபுரத்தில் நாடார் சங்கம் மற்றும் இளைஞர் பேரவை சார்பில் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் காமராஜரின் புகழை போற்றும் வகையில் மாணவமாணவிகளுக்கு இலவசமாக நோட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டது அதேபோல் சமதர்மபுரம் அல்லிநகரம் பொம்மையை கவுண்டம்பட்டி உள்ளிட்ட பல்வேறுபகுதிகளைசேர்ந்த பொதுமக்களுக்கு சிறப்பு அன்னதானமும் வழங்கப்பட்டது இந்த அன்னதானத்திற்கானஏற்பாடுகளை சமதர்மபுரம் நாடார்சங்கத்தின்தலைவர் மருதுபாண்டி செயலாளர் தவமணி துணைத்தலைவர்ஜெயராம் துணைச்செயலாளர் ராமர் பொருளாளர் ஐயப்பன் துணை பொருளாளர் செல்வராஜ் ஆலோசகர் பழனிவேல் மற்றும் சமதர்மபுரம் நாடார் சங்கத்தின் நிர்வாகிகள் சார்பில் பிறந்தநாள் விழாஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன

## காமராஜரின் 124வது பிறந்த நாளை முன்னிட்டு

# தேனியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்



காமராஜரின் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என தமமுகவினர் கோரிக்கை

மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராஜரின்124வதுபிறந்தநாள் தினம்தமிழகமுழுவதும் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது

இதன் ஒரு பகுதியாக தேனி நாடார் சரஸ்வதி பள்ளியில் உள்ள காமராஜரின் திருவுருவச் சிலைக்கு பல்வேறு அரசியல் கட்சி,அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்

இதில் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் தேனி கிழக்கு மாவட்ட செயலாளர் பாலா தலைமையில் கட்சி நிர்வாகிகள் ஊர்வலமாக வருகை தந்து காமராஜரின்திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினர் காமராஜரின் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாககொண்டாட வேண்டும் என்றும் தேனி மாவட்டத்தில் காமராஜருக்குதிருவுருவ சிலை அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்தனர்

# எழுத்தாளர் பூமணி மறைவிற்கு அரசு இறுதி மரியாதை, தேவேந்திர பேனாக்கள் இயக்க தலைவர் பாலசுந்தரம் பங்கேற்பு




நாட்டின் புகழ்பெற்ற இலக்கிய மற்றும் சினிமாத்துறை எழுத்தாளர் திருமிகு பூமணி அவர்கள் 13-7-26 அன்று சென்னையில் காலமானார்.அவருடைய இறுதி சடங்கிற்காக அவரது பூத உடல் அவர் பிறந்த ஊரான கோவில்பட்டி அருகிலுள்ள ஆண்டிப்பட்டிக்குஎடுத்துவரப்பட்டு அவரது சொந்த இடத்தில் அரசு இறுதி மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க இறுதி மரியாதை செய்து நல்லடக்கம் செய்யப்பட்டது.

எழுத்தாளர் பூமணிக்கு வயது 79 ஆகும். இவரது இயற்பெயர் பூ.மாணிக்கவாசகம் இவரது புனைப்பெயர் தான் பூமணி ஆகும்.

இவர் எழுதிய சிறுகதை தொகுப்புகள்,இலக்கிய நாவல்கள்,சமூக வரலாற்று நாவல்கள், சினிமா நாவல்கள் ஆகியவைகள் வாசகர்கள் மத்தியிலும்,பொதுமக்கள் மத்தியிலும் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.இவர் பல விருதுகள் பெற்றிருந்தாலும் 2014 ம் ஆண்டு எழுதிய அஞ்ஞாடி நாவலுக்காக சிறப்பு விருதான சாகித்ய அகாடமி விருதைப்பெற்றார்.மேலும் இவரது வெக்கை நாவல்தான் அசுரன் திரைப்படமாக டைரக்டர் வெற்றிமாறன்வெளியிட்டுவெற்றி பெற்றார்என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இறுதி ஊர்வலத்தில்

# புரட்சி பாரத கட்சியின் மாவட்ட செயலாளர் வட்டாச்சியர் பத்மஜாவை நேரில் சந்தித்து கோரிக்கை மனு



புரட்சி பாரத கட்சியின் மாவட்ட செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் பத்மஜா அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை. கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திற்குட்பட் கிளியூர் துணை ஆரம்ப சுகாதார நிலையம் சுமார் 15-20 கிராமங்களுக்கு மையமாக உள்ளது. இங்கு தினமும் 200+ வெளிநோயாளிகள், கர்பிணிகள், விபத்து பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர்

இந்த பகுதியில் இருந்து உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை/கள்ளக்குறிச்சி GH செல்ல குறைந்தது 20-40 கி.மீ செல்ல வேண்டும்.

108 ஆம்புலன்ஸ் அழைத்தால் வர 30-45 நிமிடம் ஆகிறது. விபத்து, மாரடைப்பு, பிரசவ நேரத்தில் இந்த தாமதம் உயிரிழப்பை ஏற்படுத்துகிறது.

3 கடந்த 1 வருடத்தில் ஆம்புலன்ஸ் தாமதத்தால் 2கர்பிணிகள், 3விபத்து நோயாளிகள் வழியிலேயே உயிரிழந்த சம்பவம் நடந்துள்ளது.

. இரவு நேரத்தில் 108 வாகனம் கிடைக்காமல் தனியார் வாகனத்தில் அதிக கட்டணம் கொடுத்து மக்கள் தவிக்கின்றனர்.

பொதுமக்கள் உயிரை காக்கும் நோக்கில் [உங்க PHCபெயர்]ஆரம்பசுகாதாரநிலையவளாகத்தில்ஒரு 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை நிரந்தரமாக நிறுத்தி வைத்து, 24 மணி நேரமும் ஓட்டுனர் + EMT பணியாளர்களை நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு

இதனால் உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தின் கிழக்கு பகுதி 50,000+ மக்கள் பயன்பெறுவார்கள். "தங்க நேரம்" Golden Hour-ல் சிகிச்சை கிடைத்து ஏராளமான உயிர்கள்காப்பாற்றப்படும்.என்றுமாவட்டஆட்சியரை சந்தித்து கோரிக்கை வைத்தார் புரட்சி பாரதம் கட்சி கிழக்கு மாவட்ட செயலாளர் முனைவர் K..K. ஏழுமலை

# குட்கா விற்பனை செய்த நபர் கைது



14.07.2026ம் தேதி கள்ளக்குறிச்சி மாவட்டம் வடபொன்பரப்பி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பிரம்மகுண்டம் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தன்(38) என்ற நபர் ஹான்ஸ் போன்ற குட்கா பொருட்களை விற்பனை செய்த குற்றத்திற்காக வடபொன்பரப்பி போலீசார் அவரை கைது செய்து அவரிடமிருந்து 13.500kg குட்கா பொருட்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது

## ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே

# ஏடிஎம் இயந்திரத்தில் இருந்த ஏழு லட்சம் ரூபாய் பணம் கொள்ளை





கலவை அருகே ஆதிபராசக்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி நுழைவாயில் தடுப்பு சுவர் அருகே வைக்கப்பட்டிருந்த ஐ சி ஐ சி ஐ வங்கி ஏடிஎம் இயந்திரம் மர்ம நபர்களால் வெல்டிங் இயந்திரம் மூலம் உடைக்கப்பட்டு ஏடிஎம் இயந்திரத்தில் இருந்த ஏழு லட்சம் ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருக்க சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது

சம்பவம் குறித்து தகவல் அறிந்த ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணை மேற்கொண்டு உள்ளார் மேலும் கைரேகை நிபுணர்கள் சம்பவ இடத்தில் தடயங்களை சேகரித்தும் ஏடிஎம் இயந்திரத்தில் இருந்த சிசிடி கேமரா மற்றும் கல்லூரி நுழைவாயில் முன்பு இருக்கும் சிசிடிவி கேமரா காட்சிகளை கொண்டு காவல்துறையினர் கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர் பிரபல தனியார் கல்லூரி நுழைவாயிலின் தடுப்பு சுவரிலிருந்து ஏடிஎம் இயந்திரம் வெல்டிங் மிஷின் வைத்து உடைக்கப்பட்டு இருக்கும் சம்பவம் பொதுமக்களை அச்சமடைய செய்துள்ளது.

# உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம்: மகேந்திராவடி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.07.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாமின் ஒரு பகுதியாக நெமிலி வட்டத்திற்குட்பட்ட மகேந்திராவடி அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது பள்ளியின் கல்வி செயல்பாடுகள், அடிப்படை வசதிகள் மற்றும் மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் குறித்து பார்வையிட்ட ஆட்சியர், மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்களின் கல்வி, எதிர்கால இலக்குகள் மற்றும் பள்ளி வசதிகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், மாணவர்கள் சிறப்பாக கல்வி கற்று உயரிய நிலையை அடைய வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது முதன்மை கல்வி அலுவலர் திருமதி மோகனா, வட்டாட்சியர் திரு பன்னீர்செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சங்கரன்கோவிலில் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிப்பு



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து நானும் சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் கௌசல்யா வெங்கடேஷ் அவர்களும் அன்னதானத்தை தொடங்கி வைத்தோம்


நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் ஒன்றிய கழகச்செயலாளர்லாலா சங்கர பாண்டியன் குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் கடற்கரை குருவிகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் கிரிஸ்டோபர் மாவட்ட பொருளாளர் இல.சரவணன் பேரூராட்சி கவுன்சிலர் ராஜா ஆறுமுகம் வார்டு செயலாளர் வெள்ளத்துரை மாவட்ட பிரதிநிதி ஸ்டீபன் சத்யராஜ் வார்டு செயலாளர் பெர்னாண்டஸ் முன்னாள் பொருளாளர் ஜோசப் முன்னாள் தொண்டர் அணி துணை அமைப்பாளர் குலசை ரவிச்சந்திரன் தொமுச பொதுக்குழு உறுப்பினர் செல்வகுமார் முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர் குமார் கழக வழக்கறிஞர்கள் ஜெயக்குமார் வனராஜ் அரிகிருஷ்ணன் இளைஞரணி துணை அமைப்பாளர் செட்டியூர் ஹரி சட்டநாதன் சமுத்திர பாண்டியன் சிவசுப்பிரமணியன் நாட்டாமை நாட்டாமை மாரியப்பன் செயலாளர் முருகன் ஜோயல் முருகன் பேக்கரி அப்துல் ரசாக் முகைதீன் பாச்சா மணிகண்டன் கதிர்மணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தாய்மார்கள் கலந்து கொண்டனர்

மாலையில் 124 தாய்மார்கள் பொங்கலிடும் நிகழ்ச்சி இருக்கிறது அந்த நிகழ்ச்சிக்கான பானை கரண்டி அரிசி சர்க்கரை போன்ற பொங்கல் பொருட்களை வழங்கினோம்.

# செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகம் முழுவதும் சுற்றுச்சுவர் அமைக்க திருவள்ளூர் எம்.பி., சசிகாந்த் செந்திலிடம் கோரிக்கை



திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பள்ளி வளாக முழுவதும் சுற்றுச் சுவர் அமைத்தல் நுழைவா யில் பெரிய அளவில் விரிவுப்படுத்தி நினைவுத் தூண் அமைத்து கொடுக்கவும் வகுப்பறைகள் , மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பெரிய அளவிலான சுத்திகரிக்கப்பு நீர் தேக்க தொட்டி அமைத்தல் , பள்ளி காலை வழிபாடு கலை நிகழ்ச்சி விளையாட்டு போட்டிகள் நடத்த கலையரங்கம் கட்டுதல். உள்ளிட்ட கோரிக்கைகளை நிறவேற்றி தர திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புமிகு சசிகாந்த் செந்தில் .இ.ஆ.ப அவர்களிடம் கோரிக்கை மனுவை தலைமையாசிரியர் வெங்கடேசன் அளித்து கோரிக்கை விளக்கினார் மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவரும் பள்ளியின் தூதுவர் ( Ambassador )சா.அருணன்,பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகி ஜெயக்குமார், ஆசிரியர்கள் மணிகண்டன் ,இன்பராஜ், கோகுல்ராஜ் காங்கிரஸ் கமிட்டி மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் சசிகுமார் , தொகுதி பொருப்பாளர் சிதம்பரம்,நஇர்வாகிகள் நிஷாந்த்,க ளில் ரஹ்மான், அப்பாஸ், ஆகியோர் உடன் இருந்தனர்



# தூத்துக்குடியில் கர்மவீரர் காமராஜர் பிறந்தநாள் விழா பா.ஜ.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை

கர்மவீரர், கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பில் பல்வேறு இடங்களில் மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதற்கட்டமாக, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பா.ஜ.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கர்மவீரர் காமராஜரின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட தலைவர் சித்ராங்கதன் மற்றும் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். வ.உ.சி. மார்க்கெட் அருகில் அமைந்துள்ள கர்மவீரர் காமராஜரின்திருவுருவச் சிலைக்கு மாவட்ட தலைவர் தலைமையில் நிர்வாகிகள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பேசிய மாவட்டதலைவர்,"கர்மவீரர் காமராஜர் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல்,ஏழை எளிய மக்களின் வாழ்வில் கல்வி என்ற ஒளியை ஏற்றிய மாமனிதர். பள்ளிக்கல்வி வளர்ச்சிக்கும், ஏழை மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்புகளை உருவாக்கிய அவரது தொலைநோக்கு சிந்தனையே இன்று தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கான வலுவான அடித்தளமாக திகழ்கிறது. எளிமை, நேர்மை, தன்னலமற்ற மக்கள் சேவை ஆகியவற்றின் அடையாளமாக விளங்கிய காமராஜரின் கொள்கைகளும் பண்புகளும் இன்றைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக உள்ளன. அவரது உயரிய சேவைகளை என்றும் போற்றிக் காக்க வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ராஜேஷ் கண்ணன், செல்வராஜ், மாவட்ட துணைத் தலைவர்கள் சிவராமன்,வசந்தன் மற்றும் மாநில, மாவட்ட, அணி, பிரிவு நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கர்மவீரர் காமராஜருக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# தூத்துக்குடியில் கர்மவீரர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு எஸ்.ஏ.வி. பள்ளியில் மாணவர்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம்



கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜரின் 124ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி எஸ்.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், எஸ்.ஏ.வி. பள்ளிகள் பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் தி.ஐ. பவுண்டேஷன் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் இன்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமிற்குப் பள்ளியின் செயலாளர் சொர்ணலதா தலைமை தாங்கினார். பழைய மாணவர்கள் சங்கத்தின் தலைவர் டி.எம்.நடேசன், செயலாளர் ஏ.மோகன் மற்றும் பொருளாளர் ஐ.அருள் செல்வம் ஆகியோர் முன்னிலையில், மத்திய அரசு வழக்கறிஞர் எஸ்.சண்முக சுந்தரம் ஆகியோர் இலவச கண் சிகிச்சை முகாமைத் தொடங்கி வைத்தார்.

முகாமின் தொடக்கத்தில், மத்திய அரசு வழக்கறிஞர் எஸ்.சண்முக சுந்தரம் சிறப்புரையாற்றினார்.சங்கத்தின்துணைச் செயலாளரும் கண் சிகிச்சை முகாம் ஒருங்கிணைப்பாளருமான சந்தான கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் சங்கத்தின் துணைத் தலைவர்கள் ஹரிஹர கிருஷ்ணன், சண்முகராஜா,தலைமை ஆசிரியர் மாரியப்பன், தலைமையாசிரியை உமாதேவி, ஜேஸ்மின், சங்க துணைச் செயலாளர்கள் ரிஷிகேசன், இசக்கிசுந்தர்,அமைப்புச் செயலாளர்கள் சுப்புராஜ், ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.


இறுதியில், சங்கத்தின் துணைச் செயலாளர் அந்தோணி தனுஷ் பாலன் நன்றியுரை கூறினார். இந்த இலவச கண் சிகிச்சை முகாமின் மூலம் பள்ளியின் ஏராளமான மாணவ, மாணவியர் பயனடைந்தனர்.

# கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகத்தில், காமராஜரின் 124 வது பிறந்தநாள் விழா



கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணைத் தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் செயல்பட்டு வருகின்றார். இந்த நிலையில் இன்று இக்கட்சியின் அலுவலகத்தில் கர்மவீரர் என்றழைக்கபடும் காமராஜரின் 124வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்த பட்டது. வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இந்தநிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். தொடர்ந்து காமராஜர் ஆட்சி காலத்தில் கொண்டு வர பட்ட திட்டங்கள், மக்களின் சேவைகள் குறித்து விளக்கவுரையாற்றபட்டது.அப்பொழுது பேசிய புஸ்பாணந்தம் கூறியதாவது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிகாலத்தில்,

ஏழை குழந்தைகள் பசியின்றி படிக்க, வேண்டும் என்பதற்காக 1956-ஆம் ஆண்டு முதல்,பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தினார் எனவும் அதில், குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவிக்க இலவச சீருடைகள் வழங்கப்பட்டது. எந்தவொரு கிராமமும் பள்ளியின்றி இருக்கக் கூடாது என்ற நோக்கில் ஆயிரக்கணக்கான புதிய தொடக்கப் பள்ளிகளைத் திறந்தார் எனவும், தொழில்துறையில் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முக்கிய தொழிற்சாலைகளை உருவாக்கினார் எனவும், ஏழைக் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக உயர்நிலைக் கல்வி வரை கட்டணமில்லா முறையை நடைமுறைப்படுத்தினார் எனவும், குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதைத் தடுத்து, அவர்களைப் பள்ளிக்குச் செல்ல ஊக்குவித்தார் எனவும், காமராஜர் கொண்டு வந்த கல்வி புரட்சி மற்றும் அவரது எளிமையான வாழ்க்கை முறை பல தலைமுறையினருக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று தெரிவித்தார் இந்த நிகழ்ச்சியில்,விசுவாச ஜெபவீட்டின் போதகர் காலேப், வழக்கறிஞர் குமாஸ்தாகள் செல்வராஜ்,திவ்யா, லட்சுமி, ரம்யா, ஆனைகட்டி ஜோதிமணி, கிருஷ்ணமூர்த்து,ஜெபா, நரசிம்மநாயக்கன்பாளையம் லிவிங்ஸ்டன், ஆனைமலை கன்ஸ்ட்ரக்ஷன் பாபு, மனு, பெதஸ்தா மருத்துவமனை மேளாளர் ஆலிவர் ப்ரி மேன், செயின்ட் பீட்டர் பள்ளியின் தாளாளர் தாய் ரோமலா வாண்மதி, பெதஸ்தா மருத்துவமனையின் தலைமை மருத்துவர் ஐசக் கிறிஸ்டியன் மோசஸ்,ஆசிரியர்லினி, அதிமுக முன்னாள் கவுன்சிலர்கள் ராஜகோபால், விஜயகுமார், மற்றும், வைத்தியர் பாலகிருஷ்ணன், கணுவாய் ராதாகிருஷ்ணன், பால்ராஜ், ரமேஷ் பாபு, மகேஷ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




ஈரோடு மாவட்டம், தாளவாடியில், அரசு பேருந்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.07.2026) பயணம் மேற்கொண்டு ஆய்வு மேற்கொண்டார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் காவல் நிலையம், தீயணைப்பு நிலையம், அரசு மருத்துவமனை, இசேவை மையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பத்மஜா காலை முதலே அதிரடி ஆய்வில் ஈடுபட்டார்

# தென்னிந்திய பகுதிகளில் தென்மேற்கு பருவமழை பலவீனம்: 19 மாவட்டங்களில் வெப்ப அலை வீசும்



தென்னிந்திய பகுதிகளில் தென்மேற்கு பருவமழைபலவீனமாக உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை வேலூர், மதுரை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் வெப்ப அலை வீசும். 17-ம் தேதி முதல் பருவமழை படிப்படியாக முன்னேற வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் விளைவாக, அரபிக்கடலிலிருந்து ஈரப்பதம் வருவது குறைந்துள்ளதால், கேரளம், தமிழகம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் மழைப்பொழிவு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. மேலும், பலவீனமான பருவமழை சுழற்சியுடன், எல் நினோவால் ஏற்படும் பரந்த அளவிலான கீழ்நோக்கி வீசும் காற்று மேகங்கள் உருவாவதைத் தடுத்துள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான இடங்களில் மேகமற்ற வானம் நிலவி, சூரியக்கதிர்வீச்சு அதிகளவில் தரையை அடைவதால், வழக்கத்தைவிட அதிகபட்ச வெப்பநிலை உயர்ந்து பதிவாகி வருகிறது.

இதனையடுத்து, உள் தமிழகத்தின் சில பகுதிகள், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானாவின் சில பகுதிகளுக்கு சென்னை வானிலை ஆய்வு மையம் வெப்ப அலை எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி பாரன்ஹீட் வரை உயரக்கூடும். குறிப்பாக தமிழகத்தில் இன்றும், நாளையும் திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DHINATH DHALAM Morning Tamil Daily 16.07.2026



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாளை முன்னிட்டு(15.07.2026, புதன்கிழமை) பாராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் பொருளாளரும், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினருமான.விஜய் வசந்த், எம்.பி. சென்னை, தி.நகர், திருமலைப் பிள்ளை சாலையில் அமைந்துள்ள "பெருந்தலைவர் காமராஜர் வாழ்ந்த இல்லத்தில்" உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் காங்கிரஸ் பேரியக்க தோழர்களும் தமிழ்நாடு வர்த்தக காங்கிரஸ் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளத்தில் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது



தென்காசி தெற்கு மாவட்டம்தேமுதிககழக செயலாளர் பழனி சங்கர் மாவட்ட பொருளாளர் வழக்கறிஞர் சந்துரு சுப்பிரமணியம் பேரூர் கழகச் செயலாளர் திருமலை செல்வம் பாப்பாக்குடி ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய செயலாளர் சமுத்திர பாண்டியன் கடையம்வடக்குஒன்றிய செயலாளர் சரவணன் சுப்பையா மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் தம்பி முஜே கண்ணன் மாவட்ட மகளிர் அணி செயலாளர் மயில் அம்மாள் கீழப்பாவூர் ஒன்றிய செயலாளர் உதயகுமார் ஆலங்குளம் 15 ஆவது வார்டு கவுன்சிலர் சேகர் சின்னத்தங்கம் நகர துணைசெயலாளர் ஐயா துறை நகர பொருளாளர் ராஜேந்திரன் தாசன் ஓடைக்கரை துலுக்கப்பட்டி பூஜை துறை ஆலங்குளம் உதயம் சுடலைமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் பழனி சங்கர் தேமுதிக மாவட்ட கழக செயலாளர் தென்காசி தெற்கு மாவட்டம்




ஈரோடு மாவட்டம், தாளவாடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (15.07.2026) நடைபெற்றது.



ஈரோடு மாவட்டம், தாளவாடி வட்டம், ஓங்கல்வாடி பகுதியைச் சேர்ந்த பொதுமக்களிடம் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.07.2026) வழங்கினார்.

# Why Punjab could define India's new national security leadership





*In the past 45 days, India has appointed new chiefs of Navy, Army and Intelligence Bureau apart from a new Chief of Defence Staff, virtually the heart of national security establishment. There will be a new Air Chief in the next 75 days. While the Modi government has been able to successfully address the challenges of Maoists, north-east barring Manipur and in the Kashmir Valley after the Pahalgam massacre, a new national security challenge is emerging in Punjab yet again. With the loss of political clout of Akali Dal (Badal) and its weakening of control over Panthic forces, the created vacuum has led to fringe radical players jumping in for electoral gains in the forthcoming Punjab assembly polls next year. Deliberate attempt is being made to rake up sordid 1980-1990 decades of Punjab's past, when Pakistan deep state lit internal security fires in the name of Kashmir and Khalistan due to weak or ineffective governments at the Centre. Pakistan was also supported by western countries namely US and UK as a quid pro quo for the help extended by Rawalpindi for fighting Soviet occupation of Afghanistan.*

*Even today Pakistan is continuing to support terrorism in Punjab through a self-sustaining module of hard drugs and weapon supplies through drones over the sensitive western border of India. With Pakistan now helping US in its mediation in war with Iran and ostensibly addressing the turmoil in the Middle-East, pressure is again building in Punjab with deliberate attempts being made to tarnish reputations of the Punjab Police and security forces using propaganda films using OTT platforms and social media. The human rights violations of the sordid decades are being raked up using highly inflated figures without any mention on how the security forces and the minority community were targeted by Pakistan backed extremists during the same dark period of Punjab. While religious fundamentalism is on the rise in Punjab, lack of effective governance by the ruling party in Punjab is further complicating the issue as the state chief minister derives his political power from the mercurial party chief.*

## காமராஜரின் கல்விக் கனவு மாற்றுத்திறனாளி குழந்தைகளையும் சென்றடைகிறதா?

# கோவை காட்டூர் பகுதியில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ட்ரீம் சிறப்பு பள்ளி நிறுவனத் தலைவர் ஜெயபிரபா கேள்வி



கோவை காட்டூர் பகுதியில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ட்ரீம் சிறப்புப் பள்ளி செயல்பட்டு வருகிறது. 2023ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் சுமார் 90 சிறப்புக் குழந்தைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இக்குழந்தைகளுக்கு இங்கு முறையான பிசியோதெரபி, பேச்சுத் தெரபி, விஷன் தெரபி, ஹைட்ரோ தெரபி, சிறப்புக் கல்வி, ஸ்கில் டெவலப்மென்ட் டிரெயினிங், மியூசிக், நடனப் பயிற்சி, ஆர்ட்ஸ் மற்றும் கிராஃப்ட்ஸ் உள்ளிட்ட பல பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில்இன்று, "காமராஜரின் கல்விக் கனவு மாற்றுத்திறனாளி குழந்தைகளையும் சென்றடைகிறதா?" என்ற கேள்வியை தமிழக அரசுக்கு இப்பள்ளியின் சார்பாக கேள்வி எழுப்பியுள்ளனர்.

பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்தநாளை முன்னிட்டு, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ட்ரீம் சிறப்புப் பள்ளி மற்றும் மறுவாழ்வு மையம் சார்பில் காமராஜர் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் உரையாற்றிய நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் ஜெயபிரபா, தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கையை விடுத்தார்.

"காமராஜர் 'ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி' என்ற கொள்கையை உருவாக்கினார். இன்று அந்த 'ஒவ்வொரு குழந்தை' என்ற வார்த்தையில் மாற்றுத்திறனாளி குழந்தைகளும் உள்ளனரா?" என்று கேள்வி எழுப்பினார்.

அரசுப் பள்ளிகளுக்கு அரசு உள்ளது. தனியார் பள்ளிகளுக்கு கட்டண வருவாய் உள்ளது. ஆனால்,ஏழை மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி, சிகிச்சை, மறுவாழ்வு, உணவு, போக்குவரத்து வழங்கும் சிறப்புப் பள்ளிகள்எதைநம்பிஇயங்க வேண்டும்? எனவும், காமராஜர் தற்போது வாழ்ந்திருந்தால், இத்தகைய பள்ளிகள் நிதியின்றி போராட அனுமதித்திருப்பாரா? எனவும், இது எங்களின் குற்றச்சாட்டு அல்ல; தமிழக அரசிடம் எங்களின் மனப்பூர்வமான கேள்வி என்றார்.

தமிழக அரசு சிறப்புப் பள்ளிகளுக்கான நிரந்தர நிதியுதவி, சிறப்பாசிரியர்கள் மற்றும் சிகிச்சை நிபுணர்கள் நியமனம், உள்கட்டமைப்புமேம்பாடு,மாணவர் நலத்திட்டங்கள் மற்றும் செயல்பாட்டு மானியங்களை வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

காமராஜரின் புகைப்படத்திற்கு மாலை அணிவிப்பதைவிட, அவரது கல்விக் கொள்கையை மாற்றுத்திறனாளி குழந்தைகளின் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதே உண்மையான மரியாதை. "தமிழக அரசே, காமராஜரின் கனவை முழுமையா க்குவோம்" என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுரண்டை அருகே உள்ள பாண்டியாபுரத்தில் விவசாயிகளுக்கு பஞ்சகவ்யா தயாரிப்பு குறித்த செயல் விளக்கப் பயிற்சி நடந்தது



சுரண்டை அருகே உள்ள பாண்டியாபுரத்தில் கோவை காருண்யா தொழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்லூரி வேளாண்மை பிரிவு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் மூலம் விவசாயிகளுக்குபஞ்சகவ்யா தயாரிப்பு குறித்த பயிற்சி நடந்தது பயிற்சிக்குஆர்விஎஸ் கிருஷி விஞ்ஞான் கேந்திராஅலுவலர் சுகுமார் மற்றும் வேளாண்மை அலுவலர் வர்ஷினி ஆகியோர் வழிகாட்டினர் விவசாயி கல்யாணி முன்னிலை வகித்தார், காருண்யா பல்கலைக்கழக மாணவிகள் அபிஷா, பபிதா, சுப்ரஜா,அக்ஷிதா,அபிஷா ஹீமதி, மித்திரா, செர்லி, ஜெனிபர், தர்ஷனா, ஜெயஶ்ரீ ஆகியோர் அடங்கிய குழுவினர் விவசாயிகளுக்கு பஞ்சகவ்யா தயாரிப்பு மற்றும் அதன் பயன்பாடு ப் பயிற்சி மற்றும் பஞ்சகவ்யா தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள், தயாரிக்கும் முறை, பயன்படுத்தும் அளவு மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் பயன்கள் குறித்து விவசாயி களுக்கு நேரடி விளக்கமளித்து கலந்துரையாடி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தனர் இதில் சுமார் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், தாளவாடி ஊராட்சி ஒன்றியம், ஆசனூர் ஊராட்சி, ஓங்கல்வாடியில் உள்ள நூலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.07.2026) ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்டம், கேர்மாளம், ஆசனூரில் வேளாண்மை உழவர் நலத்துறை, துணை வேளாண்மை விரிவாக்க மையம், விதை சேமிப்பு கிடங்கில், விவசாயிகளுக்கு விவசாய சாகுபடிக்கு தேவையான விதைகள் மற்றும் உயிர் உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (15.07.2026) வழங்கினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.